[2018] 13 S.C.R. 1093

இந்திய உச்சநீதிமன்றம்

கமில்

எதிர்

உத்தரப் பிரதேச மாநில அரசு

(குற்றவியல் மேல்முறையீட்டு எண். 1568 /2015)

அக்டோபர் 31, 2018

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு.ஆர். பானுமதி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.இந்திரா பானர்ஜி

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973: பிரிவு. 464 – குற்றச்சாட்டை அமைக்க தவறுதல், குற்றச்சாட்டு இல்லாமை அல்லது அமைத்ததில் பிழை – சங்கதியில், குற்றவாளி மீது இ.த.ச பிரிவு 302/34 பிரிவின்கீழ் குற்றச்சாட்டு கொண்டு தீர்ப்பு – எனினும், பிரிவு 302ன் கீழ் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாதது, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கை சாரம்சம் அவர் அக்குற்றத்திற்காகவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. – 302 பிரிவின் கீழ் தீர்ப்பு நிலைக்கத்தக்கதா – தீர்முடிவு: குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாத ஒரு தனிப்பட்ட குற்றத்திற்கான தண்டனை, குற்றம் சாட்டப்பட்டவர் தனக்குப் பாரபட்சம் ஏற்பட்டது என்பதையும், அதன் காரணமாக "நீதி

மறுக்கப்பட்டது" என்பதையும் நிரூபித்தால் மட்டுமே ரத்து செய்யப்பட முடியும் – விசாரணை நீதிமன்றத்திலோ அல்லது உயர் நீதிமன்றத்திலோ அத்தகைய வாதம் முன்வைக்கப்படவில்லை – குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பாரபட்சம் ஏற்படவில்லை, நீதி மறுக்கப்பட்டதும் காட்டப்படவில்லை – குற்ற அறிக்கையின் சாரம்சம், குற்றம் சாட்டப்பட்டவர்கள் உடன் குற்றவாளியுடன் சேர்ந்து, பாதிக்கப்பட்டவரைக் கொல்வதற்கான பொது நோக்கத்தைப் பகிர்ந்து கொண்டதைத் தெளிவாகக் குறிப்பிட்டது. மேலும், இதேபோன்ற வழக்கில், உடன் குற்றவாளி தாக்கல் செய்த மேல்முறையீடு இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது – ஆகவே, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302/34 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தண்டனையை உறுதிசெய்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் தலையிடத் தேவையில்லை. – இந்திய தண்டனை சட்டம், 1860 – பிரிவு. 302/34.

நீதிமன்றம் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்ததாவது :–

1.1 சட்டத்தின் 464 வது பிரிவு, குற்றச்சாட்டு வனைய விடுதல் அல்லது இல்லாதது அல்லது வனைந்ததில் உள்ள பிழையின் விளைவைப் பற்றியது. அதன் உட்பிரிவு (1) ன்படி, தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் எந்தக் கண்டறிதல், தண்டனை அல்லது உத்தரவும், குற்றச்சாட்டு வனைய விடுதல் அல்லது இல்லாதது அல்லது

வனைந்ததில் உள்ள பிழையின் அடிப்படையின் கீழ் மேல்முறையீடு, உறுதிப்படுத்தல் அல்லது மறுபரிசீலனை நீதிமன்றத்தின் கருத்துப்படி, நீதியின் தோல்வி உண்மையில் இதன் மூலம் ஏற்பட்டால் தவிர செல்லுபடியற்றதாகக் கருதப்பட மாட்டாது. குற்றச்சாட்டு இல்லாதது, குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பாரபட்சத்தை ஏற்படுத்தி, அதன் காரணமாக நீதி மறுக்கப்பட்டிருந்தால் மட்டுமே, குற்ற தீர்ப்பை செல்லாததாக்கும். [பத்தி 10, 11] [1098–F–G; 1099–B]

1.2 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடன் பிரிவு 34 இன் கீழ் மேல்முறையீட்டாளருக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படவில்லை. ஆனால், குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாதது, நீதி மறுக்கப்பட்டதற்கு வழிவகுத்தது என்பதை நிரூபிக்க வேண்டியது குற்றம் சாட்டப்பட்டவரின் பொறுப்பாகும். பிரிவு 302/34 இன் கீழ் ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாவிட்டாலும், மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையின் சாரம்சம், அவர் அக்குற்றத்திற்காகவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டதில், மேல்முறையீட்டாளர் மற்றும் உடன்–குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிரிவு 323/34 இன் கீழ் மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தாலும், குற்ற அறிக்கையின் சாரம்சம், முதல் குற்றம் சாட்டப்பட்டவருடன் சேர்ந்து, பாதிக்கப்பட்டவரின் கொலையைச் செய்வதில் அவர்கள் பொது

நோக்கத்தைப் பகிர்ந்து கொண்டதை வெளிப்படையாகக் கூறுகிறது. [பத்தி 18] [1104–F–G; 1105–E]

1.3 குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 302, 302/34, 323 மற்றும் 323/34 ஆகியவற்றின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டனர் என்றும், அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றும், விசாரணைக்கு ஒப்புக்கொண்டனர் என்றும் விசாரணை நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. இதனால், மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவர், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடன் பிரிவு 34 இன் கீழ் தனக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டார். உண்மையில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடன் பிரிவு 34 இன் கீழ் தனக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படவில்லை என்று மேல்முறையீட்டாளர் கருதியிருந்தால், அவர் அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்டதற்கே ஆட்சேபனை தெரிவித்திருப்பார். மேலும், மேல்முறையீட்டாளர், குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படாதது குறித்து, மிக ஆரம்ப நிலையிலேயே, அதாவது விசாரணை நீதிமன்றத்திலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமான உயர் நீதிமன்றத்திலும், எந்த ஆட்சேபனையும் எழுப்பவில்லை. [பத்தி 19] [1105–F–G]

1.4 நீதிமன்றம் பின்பற்றிய நடைமுறை மேல்முறையீட்டாளருக்குப் பாரபட்சத்தை ஏற்படுத்தவில்லை, அத்துடன் அவருக்கு இயற்கை நீதி கொள்கைகளை மறுக்கவில்லை. உயர் நீதிமன்றத்தில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடன் பிரிவு 34 இன் கீழ் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாதது தனக்குப் பாரபட்சத்தை ஏற்படுத்தியதாக மேல்முறையீட்டாளர் எந்தக் குறையையும் எழுப்பவில்லை. மாறாக, மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான வழக்கறிஞர், பிரிவு 34 இல் உள்ள பகரப் பொறுப்பு கொள்கையின்படி மேல்முறையீட்டாளர் தண்டிக்கப்பட்டிருக்கக் கூடாது என்று மட்டுமே வாதிட்டார். இந்த அம்சங்கள் அனைத்தும், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34 இன் கீழ் தனக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மேல்முறையீட்டாளர் தெளிவாகப் புரிந்துகொண்டார் என்பதையும், அவர் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 இன் கீழ் உள்ள குற்றச்சாட்டுக்காகவே தொடர்ந்து தன்னைத் தற்காத்துக் கொண்டார் என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றன.[பத்தி 20, 21] [1106–D, F]

1.6 இதேபோன்ற வழக்கில், உடன்–குற்றவாளி நசீர் தாக்கல் செய்த மேல்முறையீடு இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. குற்றச்சாட்டு பதிவு செய்யப்படாமல், ஒரு தனிப்பட்ட குற்றத்திற்கான தண்டனை, குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பாரபட்சம் ஏற்பட்டது என்பதையும், அதன் விளைவாக "நீதி மறுக்கப்பட்டது"

என்பதையும் அவர் நிரூபித்தால் மட்டுமே ரத்து செய்யப்பட முடியும். இத்தகைய வாதம் விசாரணை நீதிமன்றத்திலோ அல்லது உயர் நீதிமன்றத்திலோ ஒருபோதும் முன்வைக்கப்படவில்லை. மேலே விவாதிக்கப்பட்டபடி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எந்தப் பாரபட்சமும் ஏற்படவில்லை. மேலும், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பில் தலையிடுவதற்கு அவசியமான நீதி மறுக்கப்பட்டதும் நிரூபிக்கப்படவில்லை. [பத்தி 23] [1107–D]

வில்லி (வில்லியம்) ஸ்லேனி எதிர் மத்தியப் பிரதேச மாநில அரசு ஏஐஆர் 1956 எஸ்சி 116; குர்பாச்சன் சிங் எதிர் பஞ்சாப் மாநில அரசு ஏஐஆர் 1957 எஸ்சி 623; மெயின் பால் எதிர் ஹரியானா மாநில அரசு (2010) 10 எஸ்.சி.சி 130; தர்பாரா சிங் எதிர் பஞ்சாப் மாநில அரசு (2012) 10 எஸ்.சி.சி 476; மோகன் சிங் எதிர் பீகார் மாநில அரசு (2011) 9 எஸ்.சி.சி 272 ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

ஏஐஆர் 1956 எஸ் 116	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 11
ஏஐஆர் 1957 எஸ் 623	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 13
(2010) 10 எஸ்.சி.சி 130	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 14
(2012) 10 எஸ்.சி.சி 476	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 15
(2011) 9 எஸ்.சி.சி 272	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 22

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு. குற்றவியல் மேல்முறையீட்டு எண்: 1568 / 2015

28.07.2014 தேதியிட்ட அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து, குற்றவியல் மேல்முறையீடு எண். 1047/1989 எழுகிறது.

மேல்முறையீட்டாளர்ருக்காக அசோக் குமார் ஷர்மா, க்ஷிதிஜ் முத்தகல், பந்தனா சிங், ஆகிய வழக்கறிஞர்கள் முன்னியாணார்கள்.

எதிர்மேல்முறையீட்டாளர்ருக்காக அன்கூர் பிரகாஷ், அஷுதோஷ் குமார் ஷர்மா, யுதிஷ்டர் பாரத்வாஜ், ல்ஹிங் என். ஆகிய வழக்கறிஞர்கள் முன்னியாணார்கள்.

நீதிமன்றத்தின் தீர்ப்பானது மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். பானுமதி, அவர்களால் பகரப்பட்டது.

1. குற்றவியல் மேல்முறையீட்டு எண்.1047/1989 இல் அலகாபாத் உயர்நீதிமன்றம் வழங்கிய 28.07.2014 தேதியிட்ட தீர்ப்பின் அடிப்படையில் இந்த மேல்முறையீடு எழுகிறது, மேலும் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து, பிரிவு 302 ஐபிசியின் கீழ் அவரது தண்டனையை உறுதிசெய்தது மற்றும் மற்ற குற்றங்கள் மற்றும்

அவருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை விசாரணை நீதிமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

2. வழக்கின் சுருக்கமான சங்கதிகள் என்னவென்றால், 03.01.1986 அன்று காலை 09.00 மணியளவில், இறந்த அக்லக்கின் தாய் மாமாவான புகார்தாரர்–பாபூ கான் (அ.சா–3) அவரது சகோதரியின் மகள் பர்வீன் தொட்டியில் இருந்து தண்ணீர் எடுக்கச் சென்ற போது குற்றம் சாட்டப்பட்ட ரஷீத் (எதிரி 1) மற்றும் ஆதில் (எதிரி 3) அவளிடம் தவறாக நடந்து கொண்டனர் என்று அவரது தந்தையால் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், அவர்களின் நற்பெயரை காப்பாற்ற அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதே நாளில், மாலை 4.00 மணியளவில், புகார்தாரர்/அ.சா–3 மற்றும் அவரது உடன்பிறந்தோரின் மகன் இறந்த அக்லக் மற்றும் ஆதில் ஹுசைன் (அ.சா–2) ஆகியோர் அவரது கடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, குற்றம் சாட்டப்பட்ட ரஷீத் கத்தியுடன் ஆயுதம் ஏந்திய நிலையில், நசீர் (எதிரி 2) ஹாக்கி மட்டையுடன் இருப்பதைக் கண்டனர், குற்றம் சாட்டப்பட்ட ஆதில் மற்றும் மேல்முறையீட்டாளர்–கமில் (எதிரி 4) கைகளில் தண்டா ஆயுதங்களுடன் அவர்களை நோக்கி வந்து, அ.சா–1, இறந்த அக்லக் மற்றும் அ.சா–3 ஆகியோரைச் சுற்றி வளைத்தனர். அதன்பிறகு, மேல்முறையீட்டாளர்–கமில் அ.சா–2 இன் தலையில் ஒரு தண்டா அடி கொடுத்தார், மேலும் இறந்த அக்லக் குற்றம் சாட்டப்பட்ட நசீரிடமிருந்து ஹாக்கி ஸ்டிக்கைப் பறிக்க முயன்றபோது, மேல்முறையீட்டாளர் – கமிலும் இறந்தவரின்

தலையில் பின்னால் இருந்து தண்டாவால் அடித்தார். அவர் தப்பி ஓட முயன்றபோது, குற்றம் சாட்டப்பட்ட நசீர் மற்றும் ஆதில் இறந்தவரைப் பிடித்தனர், பின்னர் குற்றம் சாட்டப்பட்ட ரஷீத் இறந்தவரின் மார்பில் கத்தியால் குத்தினார், அதில் இறந்தவர் அவரது மார்பில் குத்தப்பட்ட கத்தியால் தரையில் விழுந்தார். அ.சா–3 கூச்சலிட்டதும், ஜமால் உதின் (அ.சா–1) மற்றவர்களுடன் உதவிக்காக அங்கு வந்தார். அதன்பிறகு, குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் ஓடிவிட்டனர், இறந்தவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் இறந்துவிடார். விசாரணை முடிந்ததும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

3. இந்திய தண்டணைச் சட்டப் பிரிவு 302, 302 உடனிணைந்த பிரிவு 34, 323 மற்றும் 323 உடனிணைந்த பிரிவு 34 கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிருபிக்க, அரசுத் தரப்பு எட்டு சாட்சிகளை விசாரித்தது மற்றும் பல ஆவணங்களை குறியீடு செய்யப்பட்டது.

4. முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை பரிசீலித்து, விசாரணை நீதிமன்றம் 01.05.1989 தேதியிட்ட தீர்ப்பின்படி குற்றம் சாட்டப்பட்டவரை கீழ்க்கண்டவாறு தண்டித்தது:–

குற்றஞ்சாட்டப்பட்டவர்	குற்றத் தீர்ப்பு	தண்டணை
ரஷீத் (எதிரி 1)	இ.த.ச. பிரிவு 302, 323 உடனிணைந்த பிரிவு 34	ஆயுள் சிறைத் தண்டனையும், ஒரு மாதம் கடும்காவல் சிறை தண்டனை வழங்கப்பட்டது.
நசீர் (எதிரி 2)	இ.த.ச. பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34, இ.த.ச. பிரிவு 323 உடனிணைந்த பிரிவு 34	ஆயுள் சிறைத் தண்டனையும், ஒரு மாதம் கடும்காவல் சிறை தண்டனை வழங்கப்பட்டது.
ஆதில் (எதிரி 3)	இ.த.ச. பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34, இ.த.ச. பிரிவு 323 உடனிணைந்த பிரிவு 34	ஆயுள் சிறைத் தண்டனையும், ஒரு மாதம் கடும்காவல் சிறை தண்டனை வழங்கப்பட்டது.
கமில் (எதிரி 4)	இ.த.ச. பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34, இ.த.ச. பிரிவு 323	ஆயுள் சிறைத் தண்டனையும், ஒரு மாதம் கடும்காவல் சிறை தண்டனை

		வழங்கப்பட்டது.

5. பாதிக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவர் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார், அது 28.07.2014 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், சிறப்பு அனுமதி மனு(குற்றவியல்) எண்.9886/2014 இல் உச்ச நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட நசீர் தாக்கல் செய்த மேல்முறையீடு, 22.01.2015 தேதியிட்ட உத்தரவின்படி தள்ளுபடி செய்யப்பட்டது.

6. சம்பவம் நடந்த தேதியில் அதாவது 03.01.1986 அன்று கண்ணுற்ற சாட்சிகள் பாபு/பாபூ கான் (அ.சா–3), ஜமாலுதீன் (அ.சா–1) மற்றும் ஆதில் (அ.சா–2) ஆகியோரின் சாட்சியத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர்கிறது. பிற்பகல் 04.00, அ.சா–3, அவரது உடன்பிறந்தோரின் மகன் (இறந்த அக்லாக்) மற்றும் ஆதில் ஹுசைன் (அ.சா–2) ஆகியோருடன் ஜோகிபுராவில் உள்ள தனது கடைக்குச் சென்று கொண்டிருந்தனர், அவர்கள் லால்பூரில் உள்ள கோவிலுக்கு அருகே சென்றபோது, குற்றம் சாட்டப்பட்ட நான்கு நபர்களும் அவர்களுக்காக நின்று காத்திருப்பதைக் கண்டனர். அந்த நேரத்தில் குற்றம் சாட்டப்பட்ட ரஷீத் கையில் கத்தி வைத்திருந்ததாகவும், குற்றம் சாட்டப்பட்ட நசீர் மற்றும் கமில்

முறையே ஹாக்கி மற்றும் தண்டா வைத்திருந்ததாகவும் அ.சா–3 சாட்சியம் அளித்தார். உடனே, மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்ட கமில் ஆதில் ஹுசைனின் (அ.சா–2) தலையில் ஒரு தண்டா அடி கொடுத்தார். இறந்த அக்லக் குற்றம் சாட்டப்பட்ட நசீரிடமிருந்து ஹாக்கி ஸ்டிக்கைப் பறிக்க முயன்றபோது, மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்ட கமில், இறந்த அக்லக்கின் தலையில் பின்னால் இருந்து தண்டாவினால் அடித்தார். இறந்த அக்லக் தப்பிக்க ஓட முயன்றபோது, குற்றம் சாட்டப்பட்ட நசீரும் ஆதிலும் அவனது இரு கைகளையும் பிடித்தனர், அதே நேரத்தில், மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்ட கமில், ஆதிலை (அ.சா–2) தண்டாவால் தாக்கினார். மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்ட கமிலிடம் இருந்து அ.சா–3 தண்டாவைப் பறித்து அதே தண்டா மூலம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க முயன்றபோது, ரஷீத் இறந்த அக்லாக்கின் மார்பில் கத்தியால் குத்தினார். அப்போது, அ.சா–3 உதவி கேட்டு சத்தம் போட்டார், இதையறிந்த அ.சா–3–ன் ஸ்டாலில் டீ எடுத்துக்கொண்டிருந்த ஜமாலுதீன் (அ.சா–1), அஃப்சர் அலிகான் மற்றும் ஷம்ஷாத் ஹுசைன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்களை பார்த்ததும் குற்றவாளிகள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். அதன்பிறகு, அ.சா–3 சைக்கிள் ரிக்ஷாவை எடுத்துக்கொண்டு இறந்த அக்லாக்கை மாவட்ட மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். இறந்த அக்லக் தனது இதயத்தில் கத்தி இன்னும் ஊடுருவியதால் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். இறந்தவரின் மார்பில் இருந்து கத்தியை அவரே எடுத்ததாக அ.சா–3

சாட்சியம் அளித்தார். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அ.சா–3 மற்றும் காயமடைந்த நேரில் பார்த்த சாட்சிகளான ஆதில் ஹுசைன் (அ.சா–2) மற்றும் ஜமாலுதீன் (அ.சா–1) ஆகியோரின் சான்றுகள் உறுதியானவை மற்றும் சீரானவை.

7. மேல்முறையீட்டாளரின் கருத்து என்னவென்றால், பிரிவு 302 ஐபிசியின் கீழ் அவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்படவில்லை, எனவே பிரிவு 302 ஐபிசியின் கீழ் மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவரின் தண்டனை நிலைக்ககதக்கது அல்ல. ஐபிசி பிரிவு 302–ன் கீழ் குற்றஞ்சாட்டப்படாதது அவருக்கு அநீதியை ஏற்படுத்தியுள்ளது என்பது மேல்முறையீட்டாளரின் கருத்து. கேள்வி ஒரு முக்கிய கேள்வியாக இருந்தாலும், மேல்முறையீட்டாளருக்கு எந்த நிலையிலும் அதை எழுப்ப சுதந்திரம் உள்ளது என்று மேலும் சமர்ப்பிக்கப்பட்டது.

8. குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 464 மீது நம்பிக்கை வைப்பதன் மூலம், "நீதியின் தோல்வி" ஏற்படாதபட்சத்தில், குற்றச்சாட்டை முன்வைப்பதில் ஏதேனும் விடுபட்டிருந்தாலும், ஒரு தண்டனை செல்லுபடியாகும் என்று எதிர் மேல்முறையீட்டாளர்–அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் சமர்பித்தார். விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் எங்களை எடுத்துக் கொண்ட, கற்றறிந்த வழக்கறிஞர், மேல்முறையீட்டாளர் தனக்கு எதிரான இ.த.ச பிரிவு 302 இன் கீழ்

உள்ள குற்றச்சாட்டுகளின் சாராம்சத்தை நன்கு அறிந்திருப்பதாகவும், சங்கதியில் மேல்முறையீட்டாளர் "அயலிட வாதம்" எடுத்துள்ளார் என்றும் சமர்பித்தார். குற்றச்சாட்டு இல்லாவிட்டாலும், மேல்முறையீட்டாளர் "நீதியின் தோல்வியை" நிரூபிக்கவில்லை என்றும், இ.த.ச பிரிவு 302 இன் கீழ் விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் ஒரே நேரத்தில் கண்டறிதல் மூலம் மேல்முறையீட்டாளரின் தண்டனை பதிவு செய்யப்பட்டுள்ளது எனவே இதில் தலையிட முடியாது என்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

9. இரு தரப்பு வாதங்களை நாங்கள் பரிசீலித்தோம் மற்றும் பதிவில் வைக்கப்பட்டுள்ள எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் ஆவணங்களை ஆராய்ந்தோம்.

10. சட்டத்தின் 464 வது பிரிவு, குற்றச்சாட்டு வனைய விடுதல் அல்லது இல்லாதது அல்லது வனைந்ததில் உள்ள பிழையின் விளைவைப் பற்றியது. அதன் உட்பிரிவு (1) ன்படி, தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் எந்தக் கண்டறிதல், தண்டனை அல்லது உத்தரவும், குற்றச்சாட்டு வனைய விடுதல் அல்லது இல்லாதது அல்லது வனைந்ததில் உள்ள பிழையின் அடிப்படையின் கீழ் மேல்முறையீடு, உறுதிப்படுத்தல் அல்லது மறுபரிசீலனை நீதிமன்றத்தின் கருத்துப்படி, நீதியின் தோல்வி உண்மையில் இதன் மூலம் ஏற்பட்டால் தவிர செல்லுபடியற்றதாகக் கருதப்பட மாட்டாது.பிரிவு குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 464 பின்வருமாறு கூறுகிறது:–

"464. குற்றம் சாட்டப்படாமல் இருப்பது, அல்லது இல்லாமை, அல்லது பிழையின் விளைவு –

(1) தகுதி வாய்ந்த அதிகார வரம்புடைய நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எந்தக் கண்டறிதலும், தண்டனையும் அல்லது உத்தரவும், குற்றச்சாட்டில் தவறு, புறக்கணிப்பு அல்லது விதிமீறல், குற்றச்சாட்டை தவறாகச் சேர்த்தல் உட்பட அதன் மூலம், மேல்முறையீடு, உறுதிப்படுத்தல் அல்லது மறுபரிசீலனை நீதிமன்றத்தின் கருத்தின்படி, நீதியின் தோல்வி உண்மையில் ஏற்பட்டால் தவிர, அது தவறானதாகக் கருதப்படாது.

(2) உண்மையிலேயே நீதி தவறியிருக்கிறது என்று மேல்முறையீட்டு, உறுதிப்பாட்டு அல்லது சீராய்வு நீதிமன்றம் கருதுமானால், அது

(அ) ஒரு குற்றச்சாட்டொன்று வனையாமல் விடுபட்டிருந்தால், குற்றச்சாட்டொன்று வனையப்பட வேண்டும் என்றும், அக்குற்றச்சாட்டை வனைந்த கட்டத்திலிருந்து உடனடியாக விசாரணை மீண்டும் துவக்கப்பட வேண்டும் என்றும், கட்டளையிடலாம்;

(ஆ) குற்றச்சாட்டில் பிழை, விடுதல் அல்லது முறைகேடு ஏதேனுமிருக்கும்போது, தான் பொருத்தமென நினைக்கும் எந்த முறையிலும் வணையப்பட்ட குற்றச்சாட்டு ஒன்றின் பேரில், புதிய விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும், என்று உத்தரவிடலாம்.

11. குற்றச்சாட்டு இல்லாமல், அந்த குற்றச்சாட்டு குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பாரபட்சத்தை ஏற்படுத்தி, அதன் விளைவாக நிகழ்ந்திருந்தால் மட்டுமே, தண்டனையைச் செல்லாததாக்கும். வில்லி (வில்லியம்) ஸ்லேனி எதிர் மத்திய பிரதேச மாநிலம் ஏஐஆர் 1956 எஸ்சி 116 இல், அரசியலமைப்பு அமர்வு "குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஏற்படும் பாரபட்சம்" மற்றும் "நீதியின் தோல்வி" என்ற கருத்தை விளக்கியது மற்றும் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தது:–

"5. எங்கள் பதிலை தெரிவிப்பதற்கு முன், சட்டம் விதிகளை ஆராய்வதற்கு முன், சட்டம் என்பது ஒரு நடைமுறைக் சட்டம் என்பதையும், அனைத்து நடைமுறைச் சட்டங்களைப் போலவே, நீதியின் முடிவுகளை மேலும் மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதையும், முடிவில்லாத நுணுக்கங்களை அறிமுகப்படுத்தி அவற்றை ஏமாற்றுவதற்காக அல்ல என்பதையும் கவனிப்போம். இந்தச் சட்டத்தின் நோக்கம், ஒரு குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு, நமது இயல்பு நீதிக்

கோட்பாடுகளுக்கு இணங்க, நன்கு நிறுவப்பட்ட மற்றும் புரிந்துகொள்ளப்பட்ட வழிகளில் முழுமையான மற்றும் நியாயமான விசாரணை கிடைப்பதை உறுதி செய்வதாகும்.

அவர் அவ்வாறு செய்தால், தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் அவர் விசாரிக்கப்பட்டால், அவர் விசாரிக்கப்படும் குற்றத்தின் தன்மையை அவருக்குச் சொல்லி, தெளிவாகப் புரிந்து கொண்டால், அவருக்கு எதிரான வழக்கை அவருக்கு முழுமையாகவும் நியாயமாகவும் விளக்கி, தன்னைத் தற்காத்துக் கொள்ள முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்டால், சட்டத்தின் வெளிப்படையான நடைமுறைகள் 'குறிப்பிடத்தக்க அளவில்' பின்பற்றப்பட்டிருந்தால், நடைமுறையில் ஏற்படும் சாதாரண தவறுகள், முக்கியமற்ற பிழைகள் மற்றும் விசாரணையில் ஏற்படும் விடுபடுதல்கள் ஆகியவற்றைச் சட்டம் மன்னிப்புக்குரியதாகக் கருதுகிறது. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் குறிப்பிடத்தக்கப் பாரபட்சத்தை நிரூபிக்காத வரை, விசாரணை செல்லாததாகாது. இதுவே, விரிவாக பேசினால், குற்றவியல் நடைமுறைச் சட்டம் அடிப்படையாகக் கொண்டிருக்கும் அடிப்படைக் கொள்கையாகும்.

12. பின்னர் அரசியல் சாசன அமர்வு நீதிமன்றம் பின்பற்றும் நடைமுறை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு உண்மையான அநீதியை ஏற்படுத்தியதா என்பதை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தது:–

"12. .....நீதிமன்ற அதிகார வரம்பின் அடிப்படையையே அசைக்கும் அளவுக்கு மிக முக்கியமானதாகவோ அல்லது ஒருவர் இயல்பு நீதிக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணானது என்று கூறக்கூடிய அளவுக்கு வெறுக்கத்தக்கதாகவோ இல்லாத பட்சத்தில், விஷயம் இறுதியில் பாரபட்சம் என்ற கேள்விக்குத்தான் வந்து சேரும். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் சில மீறல்கள் மிகவும் வெளிப்படையானதாக இருக்கும். உதாரணமாக, குற்றம் சாட்டப்பட்டவருக்கு வாதாட அனுமதி மறுப்பது, தன்னைத் தற்காத்துக் கொள்ள அனுமதிக்க மறுப்பது, குற்றச்சாட்டுகளின் தன்மையை அவருக்கு விளக்க மறுப்பது போன்றவையாகும். இவை இயல்பு நீதியின் அடித்தளத்தையே அசைப்பவை என்பதால், உடனடியாகச் சட்டவிரோதம் என்று ரத்து செய்யப்படும். இதனால் பாரபட்சம் வெளிப்படையாகத் தெரிகிறதா என்பதாலோ அல்லது இயல்பு நீதியைப் பற்றிய நன்கு நிறுவப்பட்ட கருத்துக்களுக்கு இது மிகவும் வெறுக்கத்தக்கதாக இருப்பதாலோ, இத்தகைய விசாரணை நமது நாட்டின் சட்டங்களால் எதிர்பார்க்கப்படும் ஒரு விசாரணையை கேலியாக கருதப்படுவதாலோ ரத்து செய்யப்படுகிறதா என்பது முக்கியமில்லை, ஏனெனில்

எப்படியிருந்தாலும் அவை உடனடியாக ரத்து செய்யப்படும். மற்ற மீறல்கள் அவ்வளவு வெளிப்படையாக இருக்காது. அங்கு, நிகழ்ந்த அனைத்தையும் கருத்தில் கொண்டு எந்தப் பாரபட்சமும் ஏற்படவில்லை என்பதையோ அல்லது பாரபட்சம் ஏற்படுவதற்கான நியாயமான வாய்ப்பு இல்லை என்பதையோ நிரூபிக்க முடியும். மற்றொரு வகைக் வழக்குகளில், நிலைமை மிகவும் நெருக்கமாக இருக்கலாம். அங்கே, பாரபட்சம் ஏற்படுவதற்கான நியாயமான சாத்தியக்கூறுகளின் மிகச் சிறிய ஆதாரம் கூட குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சாதகமாகச் சமநிலையை மாற்றும்.

43. ..... ஒவ்வொரு நியாயமான அனுமானமும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு ஆதரவாக செய்யப்பட வேண்டும்; ஒவ்வொரு நியாயமான சந்தேகத்தின் பலனும் அவருக்கு வழங்கப்பட வேண்டும். குற்றத்தை மதிப்பிடுவதைப் போலவே, பாரபட்சம் தொடர்பான ஒரு விஷயத்தைத் தீர்மானிக்கும்போதும், நீதி மற்றும் நியாயமான தீர்ப்பு அதே பரந்த கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஆனால் எல்லாவற்றையும் சொல்லி முடித்த பிறகு, நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு நியாயமான விசாரணை கிடைத்ததா, அவர் எந்தக் குற்றத்திற்காக விசாரிக்கப்படுகிறார் என்பதை அவர் அறிந்திருந்தாரா, அவருக்கு எதிராக நிறுவப்பட முயன்ற முக்கிய உண்மைகள் அவருக்கு நியாயமாகவும் தெளிவாகவும் விளக்கப்படுத்தப்பட்டனவா, மற்றும்

தன்னைத் தற்காத்துக் கொள்ள அவருக்கு முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்டதா என்பனவாகும். இந்த கூறுகள் அனைத்திலிருந்தும் எந்தவிதமான பாரபட்சமும் காட்டப்படாவிட்டால், குற்றச்சாட்டில் உள்ள முறைகேடுகள் அல்லது குற்றச்சாட்டு இல்லாத குறைபாடுகள் எதுவாக இருந்தாலும், தண்டனை உறுதியாக நிலைக்கதக்கதாக இருக்க வேண்டும்.

13. வில்லி ஸ்லேனி வழக்கில் அரசியலமைப்பு அமர்வு அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து, இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, குர்பச்சன் சிங் எதிர் பஞ்சாப் அரசு, ஏஐஆர் 1957 எஸ்சி 623 வழக்கில், நீதிமன்றம் தொழில்நுட்ப நுணுக்கங்களை அல்ல, மாறாக உள்ளடக்கத்தையே பார்க்க வேண்டும் என்று கவனித்து, பின்வருமாறு தீர்ப்பளித்தது:

> "7. ..... பாரபட்சம் அல்லது குற்றத்தை மதிப்பிடும்போது, நீதிமன்றங்கள் பரந்த கண்ணோட்டத்துடன் செயல்பட வேண்டும். அவை உள்ளடக்கத்தைப் பார்க்க வேண்டும், தொழில்நுட்ப நுணுக்கங்களை அல்ல. நீதிமன்றங்களின் முக்கியக் பரிசீலனை என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு நியாயமான விசாரணை கிடைத்ததா, அவர் எந்தக் குற்றத்திற்காக விசாரிக்கப்படுகிறார் என்பதை அவர் அறிந்திருந்தாரா, அவருக்கு எதிராக நிறுவ முயன்ற முக்கிய உண்மைகள் அவருக்கு நியாயமாகவும் தெளிவாகவும்

விளக்கப்படுத்தப்பட்டனவா, மற்றும் தன்னைத் தற்காத்துக் கொள்ள அவருக்கு முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்டதா என்பனவாகும்.

14. "நீதி தவறுதல்" என்ற சொற்றொடரின் பொருளைக் கருத்தில் கொண்ட பின்னரும், வில்லி ஸ்லேனி மற்றும் குர்பச்சன் சிங் வழக்குகளில் அரசியலமைப்பு அமர்வின் தீர்ப்புகளைக் குறிப்பிட்ட பின்னரும், இந்த நீதிமன்றம் மெயின் பால் எதிர் ஹரியானா மாநிலம் (2010) 10 எஸ்சிசி 130 வழக்கில் பின்வருமாறு தீர்ப்பளித்தது::–

15. ஷம்ன்சாஹேப் எம். முல்டானி எதிர் கர்நாடகா மாநிலம் (2001) 2 எஸ்சிசி 577 வழக்கில், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 464 இல் உள்ள "நீதி தவறுதல்" என்ற சொற்றொடரின் பொருளை இந்த நீதிமன்றம் பரிசீலித்தது. இந்த நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:

"……

22. … ஒரு குற்றச்சாட்டிலிருந்து ஏதேனும் விடுபட்டிருந்தாலோ அல்லது அதில் ஏதேனும் முறைகேடுகள் இருந்தாலோ, அது நீதி தவறுகை இல்லாத பட்சத்தில், குற்ற தீர்ப்பு செல்லுபடியாகும்.

23. ... குற்றவியல் நீதிமன்றம், குறிப்பாக உயர் நீதிமன்றம் நீதி தவறிவிட்டதா அல்லது அது ஒரு உருமறைப்பு மட்டும்தானா என்பதைக் கண்டறிய ஒரு முழுமையாக பரிசீலனை செய்ய வேண்டும்.

....."

16. மேற்கூறிய கொள்கைகள் இந்த நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன. மேற்கு வங்காள மாநிலம் மற்றும் ஒருவர் எதிர் லைசால் ஹக் மற்றும் பலர் (1989) 3 எஸ்சிசி 166, ஆந்திரப் பிரதேச மாநிலம் எதிர் தக்கீடிராம் ரெட்டி மற்றும் பலர் (1998) 6 எஸ்சிசி 554, தல்பீர் சிங் எதிர் உத்தரப் பிரதேச மாநிலம் (2004) 5 எஸ்சிசி 334, டும்பல சந்திர ரெட்டி எதிர் நிமக்காயல பலிரெட்டி மற்றும் பலர் (2008) 8 எஸ்சிசி 339, சனிச்சர் சாஹ்னி எதிர் பீகார் மாநிலம் (2009) 7 எஸ்சிசி 198 ஆகிய வழக்குகள் உள்ளடங்கும்.

17. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 212, 215 மற்றும் 464 தொடர்பான பின்வரும் கோட்பாடுகள், இந்த வழக்கிற்குப் பொருத்தமானவை, மேற்கூறிய விளக்கங்களிலிருந்து தெளிவாகின்றன:

(i) ஒரு குற்றச்சாட்டை உருவாக்குவதன் நோக்கம், குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு அவர் எதற்காக விசாரிக்கப்படுகிறார் மற்றும் அவர் சந்திக்க வேண்டிய அத்தியாவசிய சங்கதிகள் பற்றிய தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு உதவுவதாகும். குற்றம் சாட்டப்பட்டவர் மீது குற்றம் சாட்டப்பட்ட விஷயத்தை அறிவிப்பதற்கு நியாயமான முறையில் போதுமானதாக, குற்றம் செய்யப்பட்ட தேதி, நேரம், இடம் மற்றும் யாருக்கு எதிராகக் குற்றம் செய்யப்பட்டது பற்றிய விவரங்களும் குற்றச்சாட்டில் இருக்க வேண்டும்.

(ii) குற்றம் சாட்டப்பட்டவர், அவருக்கு எதிரான குற்றச்சாட்டின் சரியான தன்மையை, உறுதியாகவும் துல்லியமாகவும் தெரிந்துகொள்ள தகுதியுடையவர், மேலும் அவருக்கு அத்தகைய புரிந்துகொள்ளும் திறன் இல்லையென்றால், அவரது பாதுகாப்பு பாரபட்சமாக இருக்கும். குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவருக்கு எதிராக குற்றம் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டாலும், சாட்சியங்களின் அடிப்படையில், அவர் மற்றொரு நபருக்கு எதிராக குற்றம் செய்ததற்காகத் தண்டிக்கப்படுகிறார், அது தொடர்பாக எந்தக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படாமல், குற்றம் சாட்டப்பட்டவர் பாரபட்சமாக இருப்பார், இதன் விளைவாக நீதி தவறுகை ஏற்படும். ஆனால் குற்றச்சாட்டில் பிழை இருந்ததோ, குற்றம் சாட்டப்பட்டவர் பிழையை அறிந்திருந்தாரோ அங்கு நீதியின் பாரபட்சமோ தோல்வியோ இருக்காது. அத்தகைய தகவலை தற்காப்பிலிருந்து ஊகிக்க முடியும், அதாவது, குற்றம் சாட்டப்பட்டவரின் தற்காப்பு, அவர்

உண்மையான மற்றும் அசல் குற்றச்சாட்டிற்கு எதிராகத் தன்னைப் தற்காத்துக்கொள்கிறார் என்று காட்டிவது, தவறான குற்றச்சாட்டுக்கு எதிராக அல்ல என்பதாகும்.

(iii) பாரபட்சம் அல்லது குற்றத்தை மதிப்பிடும்போது, நீதிமன்றங்கள் பரந்த கண்ணோட்டத்துடன் செயல்பட வேண்டும். அவை உள்ளடக்கத்தைப் பார்க்க வேண்டும், தொழில்நுட்ப நுணுக்கங்களை அல்ல. நீதிமன்றங்களின் முக்கியக் பரிசீலனை என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு நியாயமான விசாரணை கிடைத்ததா, அவர் எந்தக் குற்றத்திற்காக விசாரிக்கப்படுகிறார் என்பதை அவர் அறிந்திருந்தாரா, அவருக்கு எதிராக நிறுவ முயன்ற முக்கிய உண்மைகள் அவருக்கு நியாயமாகவும் தெளிவாகவும் விளக்கப்படுத்தப்பட்டனவா, மற்றும் தன்னைத் தற்காத்துக் கொள்ள அவருக்கு முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்டதா என்பனவாகும். (முக்கியத்துவம் அளிக்கப்பட்டது)

15. தர்பாரா சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் (2012) 10 எஸ்சிசி 476 வழக்கில், இந்தக் நீதிமன்றம் இதேபோன்ற ஒரு பிரச்சினையைக் கருத்தில் கொண்டது. மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவர், குற்றச்சாட்டுப் பதிவு செய்வதில் ஏதேனும் குறைபாடு இருப்பதாகவும், அது குற்றஞ்சாட்டப்பட்டவரின் வழக்கைப் பாதித்து, நீதி தவறுகைக்கு வழிவகுத்ததாகவும் நீதிமன்றத்தை திருப்திப்படுத்த வேண்டும் என்ற

முடிவுக்கு வந்தது. அத்தகைய ஒரு சூழ்நிலையில் மட்டுமே நீதிமன்றம் தலையிடலாம். நீதிமன்றம் சட்டத்தை பின்வருமாறு விவரித்தது::–

"20. குற்றச்சாட்டுகள் பதிவு செய்வதில் உள்ள குறைபாடு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவுகள் 464/465 இன் கீழ் ஈடுசெய்ய முடியாத அளவுக்குக் கடுமையானதாக இருக்க வேண்டும். இந்தப் பிரிவுகள், ஒரு தண்டனை அல்லது குற்ற தீர்ப்பு ஆணை, குற்றச்சாட்டு பதிவு செய்யப்படவில்லை என்பதாலோ, அல்லது குற்றச்சாட்டுகளில் சில முறைகேடுகள், விடுபடுதல்கள் அல்லது தவறான இணைப்புகள் இருந்ததாலோ மட்டும் செல்லாததாகக் கருதப்படாது என்று கூறுகின்றன. ஆனால், இதன் விளைவாக நீதி தவறுகை என்று நீதிமன்றம் முடிவு செய்தால் மட்டுமே செல்லாததாகும். சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதில் ஏதேனும் பிழை, விடுபடுதல் அல்லது முறைகேடு நீதி தவறுகைக்கு வழிவகுத்ததா என்பதைத் தீர்மானிக்கும்போது, வழக்குகளின் முந்தைய கட்டத்தில் ஏதேனும் ஆட்சேபனை எழுப்பப்பட்டிருக்க முடியுமா இல்லையா என்பதைக் நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும். பாரபட்சம் அல்லது குற்றத்தின் கேள்வியை மதிப்பிடும்போது, ஒவ்வொரு குற்றம் சாட்டப்பட்டவருக்கும் நியாயமான விசாரணைக்கு உரிமை உண்டு என்பதை நீதிமன்றம் நினைவில் கொள்ள வேண்டும்.

அங்கு, அவர் எதற்காக விசாரிக்கப்படுகிறார் என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும்; அவருக்கு எதிராக நிறுவ முயலும் உண்மைகள் அவருக்கு நியாயமாகவும் தெளிவாகவும் விளக்கப்பட வேண்டும்; மேலும், அந்தக் குற்றச்சாட்டு(களுக்கு) எதிராகத் தன்னைத் தற்காத்துக் கொள்ள அவருக்கு முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

21. 'நீதி தவறுகை' என்பது மிக எளிதாகப் பொருந்தக்கூடிய அல்லது நெகிழ்வான ஒரு சொற்றொடர். இதை எந்த வழக்கிலும் எந்தச் சூழ்நிலையிலும் பயன்படுத்த முடியும். எனினும், நீதிமன்றம் உண்மையைக் கண்டறிய முயற்சி செய்ய வேண்டும். நீதி தவறுகை என்பது, அநியாயமான தண்டனையால் மட்டுமல்ல, தேவையான ஆதாரங்களை வழங்கத் தவறியதன் விளைவாகக் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டாலும் ஏற்படும். குற்றம் சாட்டப்பட்டவர்களின் உரிமைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பாதிக்கப்பட்டவர்களுக்கும் உரிமைகள் உள்ளன என்பதை மறந்துவிடும் அளவுக்கு அவற்றை மிகைப்படுத்தி வலியுறுத்தக் கூடாது. குற்றம் சாட்டப்பட்டவர், இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் அவருக்குக் கிடைக்கும் பாதுகாப்புகளில் சில குறைபாடுகளையோ அல்லது தீங்குகளையோ அனுபவித்துள்ளார் என்பதைக் காட்ட

வேண்டும். 'பாரபட்சம்' என்பதை அதன் பொதுவான அர்த்தத்தில் விளக்கவோ, குற்றவியல் சட்டவியலுக்கு பயன்படுத்தவோ இயலாது. பாரபட்சம் என்பது விசாரணை அல்லது வழக்கின் செயல்முறைகள் தொடர்பாகவே இருக்க வேண்டும்; அவற்றின் நோக்கத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்கள் தொடர்பாக இருக்கக் கூடாது. ஒருமுறை குற்றம் சாட்டப்பட்டவர், இந்த அம்சங்களில் ஏதேனும் ஒன்றில் தனக்குக் கடுமையான பாரபட்சம் ஏற்பட்டது என்பதையும், அது குற்றவியல் சட்டவியலின் கீழ் தனக்குக் கிடைக்கும் உரிமைகளைப் பறித்துவிட்டது என்பதையும் நிரூபிக்க முடிந்தால், நீதிமன்றத்தின் உத்தரவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர் நிவாரணம் பெறலாம். (ரஃபிக் அகமது என்கிற ரஃபி எதிர் உத்தரப் பிரதேச மாநிலம் (2011) 8 எஸ்சிசி 300, எஸ்சிசி பக்கம் 320, பத்தி 36; ரத்திரமண்ட் மற்றும் பலர் எதிர் மத்தியப் பிரதேச மாநிலம் (காவல்துறை ஆய்வாளர் மூலம்) (2012) 4 எஸ்சிசி 516 மற்றும் பீமண்ணா எதிர் கர்நாடகா மாநிலம் (2012) 9 எஸ்சிசி 650) (முக்கியத்துவம் அளிக்கப்பட்டது).

16. இந்த வழக்கில் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாதது பாரபட்சத்தை ஏற்படுத்தியதா என்பதே இப்போது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய கேள்வி. நீதி தவறுகை என்பதை மதிப்பிடுவதற்கு, குற்றம் சாட்டப்பட்டவர் தாம் எந்தக் குற்றத்திற்காகக் குற்றவாளியாகக் கருதப்படுகிறாரோ, அதன் அடிப்படை அம்சங்களை

அறிந்திருந்தாரா, அவை அவருக்கு விளக்கப்படுத்தப்பட்டனவா, மற்றும் அவருக்கு நியாயமான தற்காப்பு வாய்ப்பு கிடைத்ததா என்பதை ஆராய்வது முக்கியம். இந்த வழக்கில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 இன் கீழ் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாதது, மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவரின் குற்ற தீர்ப்பை செல்லாததாக்கியதா என்பதே இந்தச் சிக்கலின் மையமாகும்.

17. குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:–

குற்றச்சாட்டுகள்

நான், சி.பி. சிங், சிறப்பு நீதிபதி (இ.சி. சட்டம்), புடான், உம்மீது பின்வரும் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்கிறேன்:

1. நசீர், த/பெ வாலி முகமது, வ/ம் ஊப்பர் பாரா, காவல் நிலையம் கோட்வாலி, பதாவுன்

2. ஆதில், வ/ம்

3. காமில், த/பெ பன்னே, இவர்களின் குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:–

முதலாவதாக:– நீங்கள், ரஷீத், 03.01.1986 அன்று, மாலை சுமார் 4:00 மணியளவில், பதாவுன் நகரிலுள்ள லால்புல் அருகே உள்ள மொஹல்லா ஊப்பர் பாரா, கோட்வாலி காவல் நிலைய எல்லைக்குள், அக்லாக் மற்றும் அவருக்கு உதவி செய்ய வரும் வேறு எவரேனும் மீது கொலைகாரத் தாக்குதல் நடத்தப் பொது நோக்கத்தை உருவாக்கினீர்கள். மேற்கண்ட பொது நோக்கத்தின் தொடர்ச்சியாக, நீங்கள், ரஷீத், மேற்கூறிய அக்லாக்கின் மரணத்தை உள்நோக்கத்துடன் ஏற்படுத்தி கொலை செய்தீர்கள். இதன் மூலம் நீங்கள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302/34 இன் கீழ் இது எனது புலனுக்கு உட்பட்டு தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்துள்ளீர்கள்.

இரண்டாவதாக:– மேற்கூறிய தேதி, நேரம் மற்றும் இடத்தில் ஆதிலுக்குத் தானாகவே காயம் ஏற்படுத்தினீர்கள் மற்றும் அதன் மூலம் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 323 இன் கீழ் மற்றும் என் புலனுக்கு உட்பட்டு தண்டனைக்குரிய குற்றத்தை செய்தீர்கள்.

மூன்றாவதாக:– மேற்கூறிய தேதி, நேரம் மற்றும் இடத்தில் நீங்கள் கமில் மற்றும் நசீர், ரஷீத் மற்றும் ஆதில் ஆகியோருடன் சேர்ந்து ஆதிலுக்கும் வேறு யாருக்கும் காயம் ஏற்படுத்துவதற்கான பொதுவான எண்ணத்தை உருவாக்கி, அந்த பொதுவான நோக்கத்திற்காக ஆதில் தானாக முன்வந்து ஆதிலுக்கு காயத்தை ஏற்படுத்தியதால், நீங்கள் குற்றம் செய்தீர்கள். இந்திய தண்டனைச்

சட்டத்தின் பிரிவு 323/34–ன் கீழ் மற்றும் என் புலனுக்கு உட்பட்ட தண்டனைக்குரியது.

மேலும் மேற்படி குற்றச்சாட்டின் பேரில் நீங்கள் இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று இதன் மூலம் நான் அறிவுறுத்துகிறேன்.

(சி.பி. சிங்)

கூடுதல் மாவட்ட நீதிபதி,

சிறப்பு நீதிபதி (அத்தியாவசிய பொருட்கள் சட்டம்),

பதாவுன் 18.09.1986

18. மேலே குறிப்பிட்டபடி, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34 இன் கீழ் மேல்முறையீட்டாளருக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படவில்லை. ஆனால், குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாதது, நீதி தவறுகைக்கு வழிவகுத்தது என்பதை நிரூபிக்க வேண்டியது குற்றம் சாட்டப்பட்டவரின் பொறுப்பாகும். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34 இன் கீழ் ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாவிட்டாலும், மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையின் சுருக்கம், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34 இன் கீழ் குற்றத்திற்காக அவர்

குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இதை பின்வருவனவற்றிலிருந்து அறியலாம்:

"ஐயா,

03.01.1986 அன்று, புகார்தாரர் கோட்வாலி காவல் நிலையத்திற்கு வந்து, அவரது உடன்பிறந்தோரின் மகள் குழாயில் தண்ணீர் எடுக்கச் சென்றதாக தெரிவித்தார். குற்றம் சாட்டப்பட்டவர்களால் அவள் கேலி செய்யப்பட்டாள், ஆனால் சமூகத்தில் உள்ள மரியாதை காரணமாக அவர்கள் அதை ஒரு பிரச்சினையாக மாற்றவில்லை. இந்நிலையில், அங்கு கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர் தனது உடன்பிறந்தோரின் மகனை சமாதானப்படுத்தினார். நான் ஆதில் மற்றும் அக்லக் ஆகியோருடன் இன்று மாலை 04.00 மணியளவில் ஜோகிபுரத்தில் அமைந்துள்ள எனது கடைக்குச் சென்று கொண்டிருந்தோம், நாங்கள் லால்பூர் மந்திர் அருகே சென்றபோது, நெடுவரிசை எண்.2 மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் சாட்டப்பட்டவர்கள் அங்கு இருந்தனர். கமில் தண்டாவையும், நசீர் ஹாக்கியையும், ரஷீத் கையில் கத்தியையும் ஏந்தியிருந்தனர். எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். எனது உடன்பிறந்தோரின் மகன் ஆதில் அவர்கள் அவதூறாக செய்தனர். ஆதில் அதற்கு செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, நீங்கள் தொடர்ந்தால் நன்றாக இருக்காது

என்று கூறினார். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எனது உடன்பிறந்தோரின் மகனை தண்டாவால் அடித்தார். என் உடன்பிறந்தோரின் மகனை காப்பாற்ற கமிலிடமிருந்து தண்டாவைப் பறித்தேன். குற்றம் சாட்டப்பட்ட நசீர் மற்றும் ஆதில் ஆகியோர் எனது உடன்பிறந்தோரின் மகனை பிடித்தனர், ரஷீத் அவரது மார்பில் கத்தியைக் குத்தினார். எனது உடன்பிறந்தோரின் மகன் தரையில் விழுந்தான் அவரது நிலை மோசமடையத் தொடங்கியது. நான் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றேன், அங்கு அவர் இறந்துவிட்டார். இந்தத் தகவலின் அடிப்படையில், குற்ற எண் 2/86, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302/323/34 இன் கீழ் ஒரு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட ரஷீத் மற்றும் பிறர் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். குற்றம் சாட்டப்பட்ட காமில் கிடைக்கவில்லை, அவருக்கு எதிரான விசாரணை நடந்து வருகிறது. இந்த குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302/323/34 இன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. தேதி: 13.01.1986.

முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில், மேல்முறையீட்டாளர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட நசீர் மீது 323 வது பிரிவின் கீழ் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும்

கூட, குற்ற அறிக்கையின் சாராம்சம், முதல் குற்றவாளியான ரஷீத்துடன் அக்லக்கைக் கொலை செய்ததில் பொதுவான நோக்கத்தை அவர்கள் பகிர்ந்து கொண்டதாகத் தெளிவாகக் கூறுகிறது.

19. குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 302, 302/34, 323 மற்றும் 323/34 ஆகியவற்றின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டனர் என்றும், அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றும், விசாரணைக்கு ஒப்புக்கொண்டனர் என்றும் விசாரணை நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. இதனால், மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவர், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடன் பிரிவு 34 இன் கீழ் தனக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டார். உண்மையில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடன் பிரிவு 34 இன் கீழ் தனக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படவில்லை என்று மேல்முறையீட்டாளர் நினைத்திருந்தால், அவர் அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்டதற்கே ஆட்சேபனை தெரிவித்திருப்பார். மேலும், மேல்முறையீட்டாளர், குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படாதது குறித்து, மிக ஆரம்ப நிலையிலேயே, அதாவது விசாரணை நீதிமன்றத்திலும், முதல்

மேல்முறையீட்டு நீதிமன்றமான உயர் நீதிமன்றத்திலும், எந்த ஆட்சேபனையும் எழுப்பவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

20. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் விசாரணை செய்யப்பட்டபோது, மேல்முறையீட்டாளரின் பொதுவான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வதைக் காட்டும் தொடர்புடைய கேள்விகள் கூட கேட்கப்படவில்லை என்று வாதிட்டார். இந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்பதைப் பின்வருவனவற்றிலிருந்து காணலாம்:

> கேள்வி.4: 03.01.1986 அன்று, மாலை சுமார் 4:00 மணியளவில், லால் புல் மந்திர் அருகே, நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்ட காமில் மற்றும் நசீர் ஆகியோர் தண்டா மற்றும் ஹாக்கி மட்டையை வைத்துக் கொண்டு, ஆதிலுக்கு (சாட்சியின் உடன்பிறந்தோரின் மருமகன்) காயங்களை ஏற்படுத்தினீர்கள் என்றும், நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்ட நசீர் மற்றும் ஆதில் ஆகியோர் அக்லாக்கை பிடித்துக் கொண்டு, குற்றஞ்சாட்டப்பட்ட காமிலின் தூண்டுதலின் பேரில், நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்ட ரஷீத், அக்லாக்கின் மார்பில் கத்தியால்

குத்தி, கொலை செய்தீர்கள் என்றும் ஆதாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

பதில் அது தவறு."

கேள்வி எண்.5 : தகவலர் பாபு பாபுவால் புகார் பதிவு செய்யப்பட்டது தொடர்பானது. கேள்வி எண். 10, மேல்முறையீட்டாளர் மற்றும் பிற குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகக் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது தொடர்பானது. மேலே உள்ள பத்தி (14) இல் சுட்டிக்காட்டப்பட்டபடி, குற்ற அறிக்கையின் சாரம்சம், மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவர் பொதுவான நோக்கத்தைப் பகிர்ந்துகொண்டதை தெளிவாகக் கூறுகிறது. இந்த வழக்கில் நீதிமன்றம் பின்பற்றிய நடைமுறை, மேல்முறையீட்டாளருக்கு எந்தப் பாரபட்சத்தையும் ஏற்படுத்தவில்லை அல்லது அவருக்கு இயற்கை நீதிக் கொள்கைகளை மறுக்கவில்லை என்பது எங்களது கருத்தாகும்.

21. உயர்நீதிமன்றத்தில், மேல்முறையீட்டாளர், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34 இன் கீழ் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படாதது குறித்து எந்தக் குறையையும் எழுப்பவில்லை என்பதையும், அது அவருக்குப் பாரபட்சத்தை ஏற்படுத்தவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். மாறாக, மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 34 இல் குறிப்பிடப்பட்டுள்ள பகரப்

பொறுப்புக் கொள்கையை பயன்படுத்துவதன் மூலம் மேல்முறையீட்டாளர் காமிலுக்கு தண்டனை அளித்திருக்கக் கூடாது என்று மட்டுமே வாதிட்டார். இந்த அனைத்து அம்சங்களும், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34 இன் கீழ் தனக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மேல்முறையீட்டாளர் தெளிவாகப் புரிந்துகொண்டார் என்பதையும், அவர் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 இன் கீழ் உள்ள குற்றச்சாட்டுக்காகவே தொடர்ந்து தன்னைத் தற்காத்துக் கொண்டார் என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றன. இத்தகைய உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில், அவருக்கு நீதி மறுக்கப்பட்டது என்று கூற முடியாது. மேலும், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34 இன் கீழ் குற்றச்சாட்டு இல்லாதது அவருக்கு எந்தப் பாரபட்சத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் கூற முடியாது.

22. மோகன் சிங் எதிர் பீகார் மாநிலம் (2011) 9 எஸ்சிசி 272 வழக்கில், மேல்முறையீட்டாளர்கள் முதன்முறையாக உச்ச நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்வதில் உள்ள பிழைகள் தொடர்பான வாதங்களை எழுப்பியபோது, இந்த நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது::–

"14. குற்றச்சாட்டுப் பதிவு செய்வதில் உள்ள பிழைகள் அல்லது குற்றச்சாட்டுகளின் தவறான இணைப்புகள்

தொடர்பான புள்ளிகள் முதன்முறையாக உச்ச நீதிமன்றத்தில் எழுப்பப்படும்போது, இத்தகைய குறைகள் பொதுவாகக் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இது தொடர்பாக, இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வின் மங்கல் சிங் மற்றும் பிறர் எதிர் மத்திய பாரத மாநிலம் (ஏஐஆர் 1957 எஸ்சி 199) என்ற வழக்கின் தீர்ப்பைக் குறிப்பிடலாம். இந்த வழக்கின் அறிக்கை பக்கம் 201, பத்தி 5 இல், இமாம், நீதிபதி நீதிமன்றத்தின் ஒருமித்த கருத்தை வழங்கிப் பின்வருமாறு தீர்ப்பளித்தார்:

"5. எவ்வாறாயினும், குற்றச்சாட்டுகள் தவறாக இணைக்கப்பட்டுள்ளதாக வலியுறுத்தப்பட்டது. இந்த அம்சம் உயர்நீதிமன்றத்தில் வலியுறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை, ஏனெனில் அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பில் இது பற்றிய குறிப்பு எதுவும் இல்லை மற்றும் சிறப்பு அனுமதி மனுவில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, மேல்முறையீட்டாளர்கள் இந்தக் கேள்வியை இந்தக் கட்டத்தில் எழுப்ப அனுமதிக்க முடியாது.

23. இதேபோன்ற வழக்கில், உடன்–குற்றவாளி நசீர் தாக்கல் செய்த மேல்முறையீடு இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். குற்றச்சாட்டு பதிவு செய்யப்படாமல், ஒரு தனிப்பட்ட குற்றத்திற்கான தண்டனை, குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பாரபட்சம் ஏற்பட்டது என்பதையும், அதன்

விளைவாக "நீதி மறுக்கப்பட்டது" என்பதையும் அவர் நிரூபித்தால் மட்டுமே ரத்து செய்யப்பட முடியும். இத்தகைய வாதம் விசாரணை நீதிமன்றத்திலோ அல்லது உயர் நீதிமன்றத்திலோ ஒருபோதும் முன்வைக்கப்படவில்லை. மேலே விவாதிக்கப்பட்டபடி, எங்கள் கருத்தில், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எந்தப் பாரபட்சமும் ஏற்படவில்லை. மேலும், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பில் தலையிடுவதற்கு அவசியமான நீதி மறுக்கப்பட்டதும் நிரூபிக்கப்படவில்லை.

24. முடிவில், மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."